# LINGAM





அமரர்

# கந்தையா சிவலிங்கம் J.P

அவர்களின்

# லிங்க மலர்

13.01.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1/900/0311

உ

சிவமயம்



மலேசியா சிறம்ட ... ப்பிட ... க்
கொண்டவரும். கொக்குவில ... ந்தவரும்
ஏழாலையில் திருமணம் செய்து ... வரும்
சிவநேசமணி என்பவருடைய அன்புக் ... ருமான

# அமரர் சிவலிங்கம்

அவர்களுடைய

# லிங்க மலர்

## 13-01-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

அமரர்

# கந்தையா சிவலிங்கம் (J.P)

தோற்றம் 01 - 04 - 1942



மறைவு 14 - 12 - 2006

## திதி வெண்பா

சிவலிங்கம் என்பார் செகத்தைச் செறுத்துச்
சிவபெருமான் சேவடியில் சேர்ந்தார் - தவமான
ஆண்டு விய கார்த்திகை மாத அபரபக்க
பூண்ட தசமித் திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாராயணம்



## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரம்.

**முதலாம் திருமுறை**

திருத்தலம்:- **திருப்பிரமபுரம்**

பண்:- **நட்டபாடை** இராகம்:- **நாட்டை**

**திருச்சிற்றம்பலம்**

தோடுடை யசெவி யன்விடை
யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி
பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை
நாட் பணிந் தேத்த வருள் செய்த
பீடுடை யபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே.

**இரண்டாம் திருமுறை**

திருத்தலம் :- **திருக்கேதீச்சரம்**

பண் :- **நட்டராகம்** இராகம் :- **பந்துவராளி**

விருது குன்றமா மேருவில்
நாணரவாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன்
பற்றி நின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங்
கைதொழக் கடுவினை யடையாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாம் திருமுறை**

திருத்தலம் :- **திருகோணமலை**

பண் :- **புறநீர்மை** இராகம் :- **பூபாளம்**

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**நாலாம் திருமுறை**

திருத்தலம்:- **திருக்கச்சி ஏகம்பம்**

பண் :- **காந்தாரம்** இராகம் :- **நவரோஸ்**

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

**ஐந்தாம் திருமுறை**

திருத்தலம் :- **பொது**

பண் :- **திருக்குறுந்தொகை**

பாவ மும்பழி பற்றற் வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடும் அவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ வாளன் கலந்தருள் செய்யுமே.

**ஆறாம் திருமுறை**

திருத்தலம் :- **திருவாரூர்** பண் :- **திருத்தாண்டகம்.**

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீக்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமாலியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்.
அருமணியை ஆரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயேன் அயர்ந்தவாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்.

**ஏழாம் திருமுறை**

திருத்தலம் :- **திருவெண்ணெய் நல்லூர்**

பண் :- **இந்தளம்** **இராகம்** :- மாயாமாளவ கௌளை

பித்தா பிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான் மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்சினி அல்லேன் எனலாமே.

## திருவாதவூரடிகள அருளியது

**எட்டாம் திருமுறை**

திருத்தலம் :- **திருத்தில்லை**

### திருவாசகம்

தாமே தமக்குச் சுற்றமும் தாமே
தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன
மாயம் இவை போகக்
மோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன்
குறிப்பே குறிக் கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன்
ஆள்வான் பொன்னடிக்கே.

### திருக்கோவையார்

காரணி கற்பகங் கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்.
தஞ்சங்க நிதிவிதிசேர்.
ஊருணி உற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கும் ஊதியமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமாளிகைத் தேவர் அருளியது

**ஒன்பதாம் திருமுறை**

திருத்தலம் :- **தில்லை**

பண் :- **பஞ்சமம்** இராகம் :- **ஆனந்த பைரவி**

### திருவிசைப்பா

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே**
**தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே**
**சித்தத்துள் தித்திக்கும் தேனே.**
**அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே**
**அம்பலம் ஆடரங் காக**
**வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே.**

## சேந்தனார் அருளியது

திருத்தலம்: **கோயில்**

பண்: **பஞ்சமம்** இராகம்: **ஆனந்தபைரவி**

### திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகின்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலர் அருளியது

**பத்தாம் திருமுறை**

### திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவனை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காரைக்காலம்மையார் பாடியது

பதினோராம் திருமுறை

### அற்புதத் திருவந்தாதி

இடர்களையா ரேனு மெமக் கிரங்கா ரேனும்
படரு நெறி பணியாரேனும், சுடருருவில்
என்பறாக கோலத்தெரி யாடும் எம் மானார்க்
கண்பறா நெஞ்சத் தவர்க்கு.

## சேக்கிழார் அருளியது

பன்னிரண்டாம் திருமுறை

### பெரியபுராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## அருணகிரிநாதர் அருளியது

### திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

## வாழ்த்து

கச்சியப்ப சிவாச்சாரியார் பாடியது

### கந்தபுராணம்

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அரங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.



திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவலிங்கம் அவர்கள்

# வாழ்க்கை வரலாறு

கொக்குவில் என்னும் பொறுப்பதி கோயிலாலும் சுனைகளாலும் சோலைகளாலும் கல்விச் சாலைகளாலும் வயல்களாலும் வளம் மிக்கது புகழ் பூத்தது.

திருவாலும் மருவாத மனத்து மாந்தர்கள் உருவாகும் அப்பதியில் பிறக்கும் பெருமைக்குரியவர்கள் அமரர் கந்தையா அன்னரத்தினம் தம்பதியினர்.

தாழாண்மை மிக்க உயர் சைவ வேளாள் குலம் விளங்க விளங்கிய கந்தையா அன்னரத்தினம் தம்பதியினருடைய தாம்பத்திய வாழ்வு வள்ளுவர் வகுத்த

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை" (41)**

என்ற திருக்குறள் இல்வாழ்க்கை இலக்கணத்திற்கு இலக்கியமாக நடந்து வந்தது அன்னார்களுடைய இல்வாழ்க்கைப் பண்பு பயன் பேறாகப் பஞ்சலிங்கங்கள் போல ஐந்து நன்மக்களைப் பெற்றெடுத்தார்கள்.

அவர்களில் நால்வர் கமலாதேவி, சிவபாதசிங்கம், சிற்பாலன், சிவநேசன் என்பார்கள். அமரர் சிவலிங்கம் கடைக்குட்டியாக ஐந்தாவது பிள்ளையாக அமரர் அன்னை அன்னரத்தினத்தின் வயிற்றில் வந்து பிறந்தார்.

**"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு"** என்ற ஆன்றோர் வாக்கிற்குச் சான்றாகத் திகழ்ந்தவர் தந்தை அமரர் கந்தையா ஆதலினால் அமரர் சிவலிங்கம் மலேசியாவில் சிறம்பான் என்னும் நகரில் 01-04-1942ம் ஆண்டில் பிறந்தார். அமரர் எட்டு ஆண்டு சிறம்பான் நகரில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். பின்னர் 1950ம் ஆண்டில் இலங்கை வந்தார். மாதா பிதாக்களுடைய பிறப்பிடமான கொக்குவில் பிரதேசத்தில் குடி அமர்ந்து பெற்றோர் உற்றார் உறவினரோடு உறவாடி வளம்பட வாழ்த்தார்.

சிறம்பானில் சிறப்புடன் ஆரம்பித்த கற்கை நன்று என்னும் நெறியை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பித்துத் தொடர்ந்து கல்வி பயின்றார் பின்னர் உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்று தேறினார்.

மூளை வளர்ச்சிக்கும் கல்வியின் இன்றியமையாமை போல தேகாரோக்கியத்திற்கும் நோயற்ற வாழ்விற்கும் மந்தபுத்தி மறைவதற்கும் உடற்பயிற்சி அவசியம்

அமரர் சிவலிங்கம் கல்லூரியில் கல்வியில் சிரேஷ்ட மாணவ முதல்வனாகத் திகழ்ந்தது போல விளையாட்டு வீரராகவும் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிக்கெட், உதைபந்தாட்டம், உட்படக் கல்லூரியில் நிகழும் சகல விளையாட்டு போட்டிகளிலும் பங்கு ஏற்றார். பாடசாலை அணித் தலைவராகவும் முன்னணி விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். அப்பேறாக கிறிக்கெட், உதைபந்தாட்டம் என்னும் விளையாட்டுகளுக்கு நடுவராக கடமை புரியும் முதன்மையைப் பெற்றார்.

அமரர் கல்வி, விளையாட்டு என்பவற்றோடு உத்தியோகம் புருஷ இலட்சணம் என்பதை மறந்து விடவில்லை பொருள் ஈட்டும் தொழிலாக இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் 1964ம் ஆண்டு இணைந்துபணி புரிந்தார். கிடைத்த பதவியோடு நின்று விடாமல் தமது முயற்சியினால் மேன் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்றார். உள்ளக கணக்காய்வாளர் என்னும் உயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

கல்வி, செல்வம் ஈட்டில், சீரானால் அடுத்துக் கல்யாணம் என்ற ஒழுங்கு தானே!

சீவரத்தினம் ஜெயமணி தம்பதியினர் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்பவர்கள். பஞ்சலிங்கங்கள் போல ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள்.

சிவநேசமணி, செல்வமணி, சாந்தினி, சாந்தகுமார், யோககுமார் என்பவர்களே ஐவருமாவார். இரு தம்பதியினருக்கும் ஐந்து பிள்ளைகள் என்ற ஒரு ஒற்றுமை, இன்னும் ஒரு ஒற்றுமை அது எதிர்மறையாக அமைந்தது அமரர் கந்தையா தம்பதியினருடைய கடைக்குட்டி அமரர் சிவலிங்கம் சீவரத்தினம் தம்பதியினருடைய மூத்த பெண் சிவநேசமணி கடைசி ஆண் பிள்ளைக்கும் மூத்த பெண்பிள்ளைக்கும் நிகழ்ந்த திருமணம் எதிர் மறை ஆனால் அதிலும் ஒரு பெரிய ஒற்றுமை

அமரரோ சிவலிங்கம் சிவனிடத்தில் நேசம் செலுத்தி மணியாக மனைவி வந்து வாய்த்தது ஒற்றுமையோடு பூர்வ புண்ணியம் என்று தானே போற்ற வேண்டும்!

அமரர் சிவலிங்கம் சிவநேசமணி தம்பதிகள் தமது தாம்பத்திய வாழ்வில் மூன்று பிள்ளைகளை முக்கனியாகப் பெற்று மகிழ்ந்தார்கள்.

28-06-2004ல் இலண்டன் மாநகரில் திரு சதீஸ் கண்ணா என்பவரை மூத்தமகள் குமுதினி மணம் புரிந்து பெற்றோரை மகிழ்வித்தார்.

இரண்டாவது புத்திரன் தர்சன் என்பார் கொழும்பு மாநகரில் கணனித் துறையில் தொழில் புரிந்து வருகின்றார்.

மூன்றாவது மகன் டினேசன் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கின்றார்.

இல்லற வாழ்க்கையை இனிதின் இயற்றிய அமரர் சிவலிங்கம் தமது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார் அதன் பின்பு லக்ஷ்மி ஓகனைசேஷன் பாட்டா மொத்த விற்பனை நிலைய முகாமையாளராகப் பணியாற்றி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் வாழ்க்கை அமரருக்கு இனிதின் நிகழ்ந்தது அவ்வளவோடு சிவலிங்கம் அவர்கள் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்ற அளவில் நின்று விடவில்லை. தன்நலனை நன்கமைப்பது போல அயலவர் வாழ்வியலும் நலங் காண உழைத்தார். தம்மால் ஆனதும் இயன்றதுமான பொது நல சேவையில் நன்கு தம்மை ஈடுபடுத்தினார்.

சமாதான நீதவானாக விளங்கினார். சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் இயக்குனராவார். கூட்டுறவு சங்கம் கிளை 25ன் முன்னாள் தலைவராவார், ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய முன்னாள் தலைவர், கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் பொருளாளர், விவசாய சங்க முன்னாள் பொருளாளர். யாழ்/ மாவட்ட கூட்டுறவுச் சபையின் பொதுப் பிரதிநிதி, ஏழாலை சிவபூதவராயர் ஆலய தர்ம கர்த்தா சபைத் தலைவர், யாழ்/ மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர், யாழ்ப்பாணம் கிறிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவராவர். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிதியாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அறங்காவலர் சபை நிர்வாக உறுப்பினர், கொக்குவில் இந்துக்கல்லூரி அபிவிருத்திச் சங்க உப செயலாளர்.

இவை போன்ற பதவிகளை வகித்து திறம்படப் பணியாற்றி தமக்குரித்தல்லாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த பெருமைக்கு உரியவர் அமரர் சிவலிங்கம் ஆவார். இவ்வாறாகச் சீரும் சிறப்புமாகப் பேரும் புகழுமாக இல் வாழ்க்கைப் பண்பும் பயனுமாக வளமான வாழ்வில் விளங்கிய அமரர் சிவலிங்கம் அவர்கள் நோயற்று வாழ்ந்திருந்தார்.

நிலையாமையை யார் நினைவார் உலகாயத் மயக்கம் யாரை விட்டது. முன்னை வினைப் பயனுடைய முடிச்சை யார் அவிழ்க்க வல்லார்.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (339)

என்னும் வள்ளுவர் வாய்மையை உணர்ந்த வாறாகப் போல ஒரு நாள் அமரர் சிவலிங்கம் 14-12-2006 வியாழக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் ஒருவருக்கு ஒரு வார்த்தை உணர்த்தாமல் இவ்வுலக வாழ்வை உணர்ந்து தானே என்னவோ, மனைவி புலம்ப, மகள் புலம்ப, மகன்மார் புலம்ப, மருமகன் புலம்ப, சகோதரர்கள் புலம்ப, மாமா மாமி புலம்ப, மைத்துனர்கள் புலம்ப, ஊரவர், உற்றார், உறவினர், உறவி இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

அன்னாருடைய ஆன்மா அமைதி அடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

கல்யாணம் நிகழ்ந்து கால்நூற்றெண் டுகாதலித்துக்
சலியாமல் இன்ப துன்பத் திணைந்தவென் பிராணநாதா
கலிகாலக் கெடுபிடி தானோ காலன்கையில்
பலியாகப் பார்த்தும் பரிதவித்திருக் கின்றேனான்.

## மகள் புலம்பல்

செல்லமாக என்னைச் சீராட்டிச் சிறப்பளித்து
நல்லாக நான் வாழ நலம் பாராட் டும்நல்லப்பா
சொல்லாமல் கொள்ளாமல் சோதனையில் பங்கேற்காமல்
பொல்லாத எமன்கையில் போனதுபொய் யோமெய்தானோ.

## மகன்மார் புலம்பல்

அப்பா அப்பா என்றன்போடு நாமழைக்க
எப்போதும் எம்மிடத்தில் அன்புசெலுத் துமெந்தாய்
இப்போது எங்குள்ளீர் கள் இனிய மொழி கேட்டுத்
தப்பாமல் வருவீர்களென தலைவாசலில் தவங்கிடப்போம்.

## மருமகன் புலம்பல்

மருமகன் என மதித்து நன்மகளை மணமுடித்து
அருகிலாமல் ஆருயிர மைலுக்கப்பால் அனுப்பினீங்கள்
பருகப்பால் தந்து பணிவிடைகள் பல செய்யும்
உரித்தை உணராமல் ஒளித்ததெங்கே மாமாவே..........

## மாமா மாமி புலம்பல்

தங்கமான மருமகனுக்குத் தகுதியான மகளை
எங்கும் எல்லோரும் ஏந்தத் தந்தோம்
பங்கமின்றிப் பவித்திர மானபண்பு பார்த்து
எங்களுக்குள் இன்புற்ற தேக்கமாக இரங்குகின்றோமே.

## மைத்துனர் புலம்பல்

அக்கா கொடுத்து வைத்தவர்
ஆருக்கும் கிட்டாத ஆடவனைத்
தக்கார் போற்றத் தங்கணவனாகப்
பெற்றார் எனப் பெரிது மகிழ்ந்தோம்
நக்கு வந்த நமன்தன் கைக்கொண்டான்
நாவலிக்க நடுங்கி நலிகின்றோம்
எக்காலம் அத்தானைப் பிரிந்த
ஆருத்துயரம் ஆறும் தானே...............

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

**தோற்றம் :- 01-04-1942**
**மறைவு :- 14-12-2006**

எம்மை எல்லாம் அன்பால் இணைத்து, எம் இதயம் எல்லாம் இடம் பிடித்த சகோதரர், சின்னத்தம்பி கந்தையா, சின்னையா அன்னரத்தினம், தம்பதியரின் கனிஷ்ட புதல்வன் க. சிவலிங்கம் (J.P) அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாததோர் இழப்பாகும். இந்த உலகத்திலே மனிதராகப் பிறக்கும் பலரும் தமது வாழ்க்கைக் காலத்திலே தமக்கென சிலபதிவுகளை இந்த உலகத்திலே பதிந்து விடுகின்றனர். இத்தகைய பதிவுகள் அவர்களின் நிழல் இந்த மண்ணிலே என்றும் நிலைத்திருப்பதற்கு வழிவகுக்கும். இந்த வகையிலே மெல்லிய தோற்றம் ஆனால் அகன்ற உள்ளம், உயர்ந்த, சிந்தனையுடன் எல்லோரையும் கனிவுடன் நோக்கும் குணமுடைய எமது சிவலிங்கம் தம்பியின் வாழ்க்கைக் கால பதிவுகள் என்றும் எம் இதயத்தில் நீங்காத தோர் இடத்தைப் பெற்றுள்ளன. தனக்கென வாழாது பிறர்க்கெனத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த அமரர் சிவலிங்கம் அவர்கள் தனது உறவினர், அயலவர், நண்பர்கள், யாபேரையும் ஒரு கண்கொண்டு நோக்கி செயற்பட்டவர். இதனால் அவர் எல்லோரது உள்ளத்தையும் கவர்ந்து கொண்டவர். இத்தகையவரது இழப்பு எம்மை எல்லாம் ஆழ்ந்த கவலைக்கு ஆழ்த்தியுள்ளது. அவரது ஆத்மா நித்தியப் பேரின்பத்தை அடைய எல்லாம் வல்ல இறைவனின் பரம் பொருளை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் உடன் பிறப்புகள்
திருமதி. ச. கமலாதேவி (லண்டன்)
க. சிவபாதசிங்கம் (அமரர்)
க. சிற்பாலன் (திருநெல்வேலி)
க. சிவநேசன் (கொழும்பு)

தொலை பேசி இல:-
773604715
773611198
நம்பர்:- 11/6 அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யா/திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பலரதும் நன்மதிப்பைப் பெற்றவர் சிவலிங்கம்"

அமரர் சிவலிங்கம் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாமென்பது எமது அவாவாகும். அவரின் இளமை தோற்றமும் உடல் நலமும் இதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. இருந்த பொழுதிலும் ஆண்டவன் சித்தம் வேறு விதமாக அமைந்து விட்டது மிகவும் துர்ரதிஷ்டமாகும் அவர் ஆற்றி வந்த பணிகள் பலவும் ஸ்தம்பித்து விட்டன அவற்றை ஈடுசெய்வது சுலபமாக இருக்கப் போவதில்லை.


கொக்குவில் இந்துவுக்குச் சமீபமாக வசித்த அமரர் அவர்கள் தனது உடன் பிறப்புக்களைப் பின்பற்றித் தனது கல்வியை இக் கல்லூரியிலேயே தொடர்ந்தார். க.பொ.த உயர்தர வகுப்பில் அவருக்கு. இரசாயணம் கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சிறந்த மாணவனாகவும், கல்வியில் அக்கறை கொண்டவராகவும் திகழ்ந்தார். அவர் கல்விசார் துறையுடன் மட்டும் நின்று விடாது விளையாட்டுத் துறையிலும் ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். சிறந்த ஒரு கிறிக்கட் வீரராக கணிக்கப்பட்டார். அவரின் பல் துறை ஈடுபாடு அவரைக் கல்லூரியின் மாணவர் தலைவர் பதவிக்கு உயர்த்தியது.

அவரின் அமைதியான பண்பும் நேர்மையான குணாதிசயங்களும் அவரைத் தேடி பல பதவிகள் வருவதற்கு ஏதுவாக அமைந்தன. சமாதான நீதிவானாக அவர் நியமிக்கப்பட்ட பொழுது அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பங்குபற்றும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. பெரும் தொகையான மக்கள் விழாவில் பங்கேற்றுப் பாராட்டியமை இன்றும் என் கண்முன் நிற்கின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளராகப் பல காலம் நேர்மையுடனும், கடமையுணர்ச்சியுடனும், கண்ணியத்துடன் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் திரு. சிவலிங்கம் அவர்கள் அமரராகியது எம்மையெல்லாம் ஆற்றாத் துயரில் ஆழ்த்தியது.

அமரரின் மகளின் திருமணம் ஒழுங்கு செய்வதிலும் என்னால் ஒரு முக்கிய பங்காற்ற முடிந்ததையிட்டு நான் மன நிறைவடைகின்றேன். நான் கூறியவற்றில் முழு நம்பிக்கை வைத்து இத் திருமணத்தை நிறைவேற்றி வைத்தவர். இவ் விடயத்தில் அவரின் எதிர்பார்ப்புக்கள் ஆண்டவனால் நிறைவு செய்யப்பட்டுள்ளமை அமரருக்கு மன நிறைவினைக் கொடுத்திருக்கும்.

சமூகத்திற்கு வேண்டிய ஒருவர் எம்மிடமில்லையேயென்றே மனக்குறையை எமக்கு விட்டுச் சென்ற அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.



அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்முடன் சிரித்து வாழ்ந்தவர் மறைந்துவிட்டார்.

அமரர் கந்தையா சிவலிங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவர். இவர் கல்வி பயின்ற காலத்தில் நானும் கல்வி பயின்றேன். எனது மூத்த பள்ளிச் சகோதரனாகப் பயின்ற இவர் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கியவர். குறிப்பாக துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் மெய்வன்மைப் போட்டிகள் என்பவற்றில் சிறப்பாக விளையாடியவர். கல்லூரி இணைச் செயற்பாடுகளின் ஒன்றான சாரணியத்திலும் இவர் இணைந்து செயற்பட்டமை பிற்காலத்தில் சிறந்த சமூக சேவையாளனாக விளங்குவதற்கும் வழி வகுத்தது சமுகத்தின் மத்தியில் இவர் பெற்றிருந்த நற்பேரின் காரணமாக "சமாதான நீதவான்" என்ற கௌரவப் பதவியையும் பெற்றுக் கொண்டவர்.

தான் எவ்வாறு கல்வியிலும் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினாரோ அதே போன்று தனது பிள்ளைகளும் திகழ வேண்டுமென எண்ணி அவர்களுக்கு நல்வழி காட்டி வளர்த்தவர். அடிக்கடி கல்லூரிக்கு வருகை தந்து தனது பிள்ளைகளின் படிப்புப் பற்றி அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவையான கவனங்களை எடுத்து வந்த நற்தந்தையாகவும் விளங்கியவர்.

என்றுமே சிரித்த முகத்துடன் வாழ்ந்து வந்தவர். தான் கல்வி பயின்ற கல்லூரிக்காகவும் நற்சேவை ஆற்றிய பெருந்தகையுமாவார். இவர் சிவபதமடைந்த வேளையில் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவர்களுள் ஒருவராகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்.

ஆத்மீகத்திலும் இறைவழிபாட்டிலும் அதிக ஈடுபாடு உடையவராக விளங்கிய இவர் தனது பிறந்த இடமான கொக்குவிலில் அமைந்திருக்கும். கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமிகள் ஆலய திருவிழாக்களில் தவறாது கலந்து வழிபாட்டில் ஈடுபட்டுவந்த முருக பக்தனும் கூட.

இவருடைய திடீர் மறைவானது எம் யாவருக்கும் மனவேதனையை ஏற்படுத்தியிருப்பது மட்டுமன்றி, பேரிழப்பாகவும் அமைந்துள்ளது. இவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், சுற்றத்தினருடன் நாமும் துயர் பகிர்வதுடன் அமரர் சிவலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பொ. கமலநாதன்
அதிபர்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஏழாலையைப் புகுந்த இடமாகவும் கொண்ட அமரர் திரு. கந்தையா சிவலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவனாக தனது கல்வியை ஆரம்பித்தவர். கல்வி கற்கும் காலத்தில் இவர் விளையாட்டுத்துறையிலும் தனக்கென ஓர் இடத்தை வகித்து வந்தவர். அவற்றுள் உதைபந்தாட்டத்தில் எங்கள் கல்லூரியில் ஓர் முத்திரை பதித்தவர். சாரணர் இயக்கத்தில் இருந்தும் பல தொண்டுகள் செய்தவர். கல்வி கற்கும் காலத்தில் மிகவும் சுறுசுறுப்பானவர். எல்லோரிடனும் அன்பாகப் பழகுவார். முன்னைநாள் அதிபர் அமரர் திரு.சி.க.கந்தசுவாமி அவர்களால் பாராட்டப்பட்டவர்.

இவர் பாடசாலையை விட்டு விலகி சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலை பார்த்தார். வேலை முடிந்து வந்ததும் எங்கள் கல்லூரி மைதானத்தில் காணலாம். தன்னுடைய விளையாட்டுத்துறை சார்ந்தவற்றை மற்றவர்களுக்கும் கற்பிப்பார்.

இவர் காலமானார் என்ற செய்தி கேட்டதும் எங்கள் சங்க அங்கத்தவர்கள் எல்லோரும் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். நடந்தது உண்மையா என்று நம்பமுடியாமல் அங்கலாய்த்தார்கள். அவர் சிவபதம் அடைந்தாலும் அவர் எங்களுடன் இருப்பது போல எல்லோர் மனதிலும் இருக்கிறார். அவரது ஆத்மா சாந்தி அடைய கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகம் பிரார்த்திக்கின்றது. அவரது மனைவி, மகள், மகன்கள் அவரது குடும்பத்தினருக்கும் எங்கள் சங்கத்தின் சார்பாக அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சி. இராசதுரை
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவரமில்லாத தம் ஆளுமையால் உறவுகளின் உண்மை அன்பை சம்பாதித்த "லிங்கம்" அண்ணா

பிறந்தவர்கள் இறப்பது, நோய், மூப்பு, சாக்காடு என்ற மூன்றுக்கும் ஆளாவதும் இயற்கை என்பதையார் தான் ஏற்றுக் கொள்ள மறுப்பவர்? இதனை அறிந்திருந்தும் மனிதங்களை உண்மையாகவே கடைப்பிடிக்காமல் தம் பலவீனங்களால் உலகத்தால் ஏற்கப்படாதவர்களாக வாழ்கின்ற பலரைக் காண்கின்ற இன்றைய நாளில் எல்லோர் மனிதிலும் "நல்லவர் ஒருவர்" என்று நேசிக்கப்பட்ட கந்தையா சிவலிங்கம் JP அவர்கள் திடீரென்று அமரருலகடைந்தாரே என்ற செய்தி யாரைத்தான் வேதனை படவைக்கவில்லை. பாயிற்கிடவாமல் நோயிற்படுக்காமல் அந்த அன்பரை ஈசன் ஆட்கொண்டான். குடும்ப கடமைகளை நிறை வேற்றி கண்ணியமான வாழ்வு கொண்ட "கொக்குவில் சிவலிங்கம்" அண்ணா மனைவி, பிள்ளைகளுக்கு நல்லதோர் தலைவனாகவும், ஊருக்கும் உலகுக்கும், உறவுகளுக்கும், உபகாரியாக வாழ்ந்தவர் பண்பாளர், பக்திமான்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்து துணைத் தலைவராய்ப் பல ஆண்டுகள் அரும் பணி ஆற்றியவந்துள்ளார்.

**"முற்றத்து மல்லிகை மணக்காது"** என்ற மொழி சிவலிங்கம் ஐயாவை பொறுத்த அளவில் பொய், பிறந்த கொக்குவிலில் படிப்பு உயிரியல் துறையில் உன்னதமான மாணவர் உயர்தர வகுப்பில் உன்னதமான மாணவனாக இவரை அன்றைய அதிபர் திரு. C K கந்தசாமி, ஆசிரியர் ஹன்ஸ்மன் BSC ஆகியோர். இனங்கண்டு மாணவ முதல்வர் அணியின் தலைவனாக்கினர். படிப்பு, விளையாட்டு, வெளிக்கள பணிகளிலெல்லாம் தலைமைத்துவம் தான்.

1960 நடுப்பகுதிகளில் கல்லூரியின் "கார்த்தி கேசு" தலைமைத்துவத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சம்பியன். உதைபந்தாட்ட அணியின் தலைவர். கிரிக்கெட் அணியின் முதல் நிலைத் துடுப்பட்ட வீரர். இப்படி, இப்படி எத்தனை தகமைகள் பெற்றாலும் தன் அடக்க சுபாவத்தால் உலகை ஈர்த்தவர் திருவுயர் அமரர் சிவலிங்கம்.

**"லிங்கமண்ணா"** என்று எம்மவரால் அன்போடு அழைக்கப்பட்ட அமரரின் விண்ணுலக பயணம் எதிர் பார்க்காதது எதிர்பார்க்க முடியாதது.

நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில் எம்மை ஈர்த்த ஒரு ஆணழகன், ஆளுமை கொண்ட சிரேஷ்ட மாணவன். தன் பல் பரிமாணத் திறமைகளால் பெருமை சேர்த்தவர் இப்படிப்பட்ட ஒருவரின் எதிர்பாராத இழப்பை எப்படி எளிதில் சீரணிப்பது உலகை, இயற்கையை யார் தான் மீள இயலும்.

சாந்தி !

248 : காலி வீதி,
கொழும்பு 04

எம்.சின்னத்தம்பி. ஸ்ரீ தயாளன் (J.P)
துணைப் பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம் சமய விவகார அமைச்சு

(எம், எஸ் மாமா குடும்பத்தினரான ரதி (கொழும்பு) சாளினி(கனடா) பத்மினி (கொழும்பு) ஸ்ரீ ராகுலன் (யாழ்ப்பாணம்) ஸ்ரீ ரஞ்சினி (கனடா) குடும்பத்தினர்சார்பாகவும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த இனிய தலைவர்

எமது யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக அமரர் திரு. கந்தையா சிவலிங்கம் அவர்கள் 2000ம் ஆண்டில் இருந்து அமரராகும் வரை சேவையில் இருந்தார். இவர் சங்க தலைமை பொறுப்பை ஏற்றிருந்த போது சங்கத்தை இயக்கமுடியாத ஒரு நிலை இருந்த போதும் சற்றும் தயக்கம் இன்றி அப்பொறுப்பை ஏற்று திறம்பட நிர்வகித்து சங்கத்தை இன்று வரை இயக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கிய இருந்தார்.

இவரின் நிர்வாகப் பண்புகளை நோக்கும் போது ஒரு கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர், பணியாளர் என்ற பேதத்திற்கு இடமின்றி எல்லோரும் ஒற்றுமையாக செயற்பாட்டு **"கூட்டு - உறவு"** என்ற பதத்திற்கு செயலுருவம் காட்டி சங்கத்தை வளர்க்க பாடுபட்டவர் ஆவார். இதனால் ஊழியர்களிடையே அவருக்கு ஒரு உயர்ந்த மதிப்பு இருந்தது. ஊழியர் நல்லுறவை பேணும் முகமாக சங்கத்தில் வருடப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி போன்ற சமய நிகழ்வுகளையும், ஊழியர் நலன்புரிச்சங்கத்தையும் அமைத்து அதற்கான சகல ஒத்துழைப்பு, ஆலோசனை போன்றவற்றை வழங்கி தானும் ஒரு ஊழியன் போல் சங்கத்தை வழி நடத்திய தலைவர் இவர் ஒருவரே. எனக் கூறலாம்.

எவரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தல், ஊழியர்களிடையே பாரபட்சமின்மை, எவையும் அழகாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டும் என்ற அவாகாலம் தவறாத செயற்பாடு போன்ற உயரிய பண்புகளைக் கொண்ட இவர் சங்கத்தின் உயர்வே தனது சொந்த உயர்வாக கருதி செயற்பட்டார். 60 வயதிலும் ஒரு விளையாட்டு வீரராகவும் அதற்கேற்ப மிடுக்கான நடையும், முகத்தில் சிரிப்பும் கொண்ட எளிமையான தோற்றம் இன்றும் எம் மனக்கண்ணில் மறையவில்லை.

அன்றும் எமது சங்க வழமையான கடமைகள் நடைபெற்றன. காலையில் எமது சக ஊழியர் கொண்டு வந்த தினசரியில் எமது தலைவரின் சோகச் செய்தியை பார்த்ததும் எம்மால் நம்பமுடியவில்லை ஆனால் அது உறுதியாகிவிட்டது. ஆம்! மண்ணில் பிறக்கும் மாந்தருக்கும் மரணம் நிச்சயம். இதை எவராலும் தடுக்க இயலாது. இவரின் இழப்பு எமது சங்கத்திற்கு ஓர் பேரிழப்பாகும். எனினும் இவரின் தன்நலமற்ற சேவைகள் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும்.

இவரின் மறைவினால் துயருற்று தவிக்கும் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், குடும்பத்தினருக்கும், இறைவன் துணை நின்று ஆறுதல் அளிப்பாராக, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்

யாழ்மாவட்ட புடைவை நெசவாளர். கூட்டுறவுச் சங்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆளுமையுடைய சேவையாளர்

யாழ்ப்பாணம் கிறிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தினது சிரேஸ்ட உறுப்பினரும் உபதலைவர்களில் ஒருவருமாகிய கந்தையா சிவலிங்கம் அவர்களின் சேவையை தொடர்ந்தும் நாம் எதிர்பார்த்திருக்கையில் அவர் திடீரென அமரராகியது எமது சங்க உறுப்பினர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது.

மலர்ந்த முகமும், மென்மையாகப்பேசும் அமைதியான சுபாவமும் கொண்ட க. சிவலிங்கம் அவர்கள் பலதுறைகளில் ஆளுமையுடைய, உண்மையுடன் உழைக்கும் ஒரு உறுதியான சேவையாளர். அமரர் அவர்கள் இளையோருக்கு முன்னுதாரணமாக நடந்து அவர்களை வழிநடத்தியவர், நீண்டகாலம் சிறந்த மத்தியஸ்தராகத் திகழ்ந்து கிறிக்கெட் துறைசார்ந்தவர்களின் நன்மதிப்பினை தனக்கும், எமது சங்கத்திற்கும் ஈட்டித்தந்தார்.

தனது இறுதிக்காலம் வரை அமரர் அவர்கள் தொடர்ந்து பலவருடங்களாக எமது சங்கத்தின் செயற்குழுவில் உறுப்பினராகவிருந்து சங்கத்தினை சிறப்பாக வழிநடத்தியதையும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

அமரர் சிவலிங்கம் அவர்கள் பல்வேறு அமைப்புகளினூடாக சமூகத்துக்குச் செய்த சேவையின் மூலம் மறைந்த பின்னரும் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

தலைவரை இழந்து தவிக்கும் அமரரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

யாழ்ப்பாணம் கிறிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம்.
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதவராயர் ஆலய பரிபாலன சபையினரின் இரங்கற்செய்தி

## புன்னகை வதனம் போனதெங்கே

அன்றலர்ந்த செந்தாமரைபோல் மலர்ந்த முகம். அந்த முகத்தில் எந்நேரமும் தவழ்கின்ற சாந்தம், வாயிலே இணைபிரியாமல் தங்கிநிற்கும் புன்னகை, இத்தகைய தோர் காட்சிக்கு உரியவர் தான் எங்கள் பூதவராயர் ஆலய பரிபாலனசபைத் தலைவராக விளங்கிய அமரர் க.சிவலிங்கம் ஜே. பி

பத்து ஆண்டுகளாக க. சிவலிங்கம் அவர்கள் பூதவராயர் ஆலய பரிபாலனசபையின் தலைவராக பணியாற்றி உள்ளார். அவர் தலைமைத்துவம் ஏற்றிருந்த காலத்தில் பூதவராயர் ஆலயம் துரிதமாக வளர்ச்சி கண்டது அங்கு பிள்ளையார், முருகன் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டன. நித்திய பூசைகளும் நேரம் தவறாமல் ஒழுங்காக நடைபெற்றன. நைமித்திய பூசைகளும் சிறப்புற நடப்பதற்கு அவர் உறுதணையாக இருந்தார். பத்து நாட்களும் அலங்கார உற்சவங்களும், நிறைவு நாளில் சங்காபிஷேகமும் வெகு சிறப்பாக குறையேதுமின்றி நிறைவேறின.

பூதவராயர் ஆலயத்தில் இப்படியோர் கட்டுக்கோப்பான, ஒழுங்கான நிர்வாகம் இயங்குவதற்கு, அமரர் சிவலிங்கம் அவர்களின் சிறந்த தலைமைத்துவமும், ஊக்கமும் காரணமென்றால் அது மிகையாகாது இவ்விடத்து இளைஞர்களுடன் அன்பாகக் பழகி அவர்களை ஊக்கப்படுத்தி பூதவராயர் ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுத்தி இந்த ஆலயம் சிறப்பான வளர்ச்சி பெறச் செய்த சிவலிங்கம் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் எம்முடனே இருந்து இவ்வாலய வளர்ச்சிக்காகப் பணியாற்றுவார் என்று எண்ணியிருந்தோம். ஆனால் நாமொன்று நினைக்க வேறொன்று நடத்துவிட்டது.

பூதவராயப் பெருமானின் பாதாரவிந்தங்களில் அவர் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றுவிட்டாலும் அன்னாரது. ஆத்மா, ஆலய நிர்வாகத்திலே ஆலயத்தொண்டுகளிலே என்றும் எங்களுக்கு வழிகாட்டியாக, தோன்றாத் துணையாக நின்று எம்மை வழிப்படுத்தும் என்று நம்புகிறோம்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" இது ஆன்றோர்வாக்கு

அமரர் சிவலிங்கம் அவர்கள் அரிதாய்க் கிடைத்த மானிடப்பிறவியைப் பெரும் பேறாகக் கருதி உயர்வான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்.

நல்ல மனைவியும் நன்மக்கட்பேறும் பெற்று இல்லறத்தில் சிறந்த குடும்பத் தலைவனாக விளங்கியிருக்கிறார்.

சமயத் தொண்டுகளும் சமூகத்தொண்டுகளும் செய்து பொது சேவையாளனாகத் திகழ்ந்திருக்கிறார்.

பூதவராயர் ஆலய பரிபாலனசபைத் தலைவராக நின்று சமயத் தொண்டுகள். செய்ததோடு, தனிப்பட்ட முறையில் வேறு பல சமயத் தொண்டுகளையும் பொதுச் சேவைகளையும் ஆற்றியுள்ளார்.

சமாதான நீதவானாகப் பதவி ஏற்று, பிறருக்குப் பல வழிகளில் உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தாம் பெற்ற மானிடப் பிறவியை பயனுள்ள ஒரு பிறவியாகப் பெருமைப்படுத்தி வாழ்ந்து காட்டினார். சிவலிங்கம் அவர்கள்

அவருடைய ஆளுமை, திறமை, சாந்தம், வசீகரப் புன்னகை இவைகளால் இளைஞர்களை வசப்படுத்தி சமய, சமூகத் தொண்டுகளில் ஈடுபடுத்தி, தாமும் ஒரு தொண்டனாக நின்று பணியாற்றி சமய, சமூக சேவையாளனாகவும், இல்லறத்தை நல்லறமாக அமைத்த குடும்பத் தலைவனாகவும் பூரணத்துவமான வாழ்வை வாழ்ந்து காட்டி இன்று இறைவனது பாதக்கமலங்களில் ஐக்கியமாகிவிட்டார்.

அவரது புன்னகை தவழும் வதனத்தை இனி நாம் காணமுடியாது எனினும் அன்னாரது நினைவுகளோடு பூதவராயர் ஆலய பணிகளைத் தொடர்வோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஏழாலை மேற்கு
ஏழாலை

சிவபூதவராயர் ஆலய
பரிபாலகர்கள்

## பலராலும் விரும்பப்படும் கண்ணியமான முகாமையாளர்

லக்ஷ்மி ஒகனைசேஷன் பெயர் பெற்ற பாட்டா காலணிகளின் வட மாகாணத்திற்கான ஏக விநியோகஸ்தவர்களாகவும் விளங்குகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக அதன் முகாமையாளராகப் பணியாற்றியவர் அமரர் கந்தையா சிவலிங்கம்.

அவர் கடமையே கண்ணாக, கண்ணியமாக, மிகுந்த விசுவாசத்துடன் பணியாற்றியவர். எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் அவருக்கு பங்குண்டு

அவரது திடீர் மரணம் எங்களுக்கு பெரும் இழப்பாகும். எப்போதும் அவர் முகத்தில் புன்முறுவல் இழையோடும்.

இலங்கை சீமெந்து கூட்டு தாபனத்தில் உள்ளக கணக்காய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர், அவர் எமது நிறுவனத்தின் கணக்கியல் பிரிவின் இணைப்பாளராக சேர்ந்து கொண்டார்.

அவரது கடும் உழைப்பும், நேர்மையும், கடமையில் அக்கறையும் முகாமையாளர் எனும் பதவிக்கு உயர்த்தியது.

தமது பாடசாலை காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராக விளங்கியவர் அதன் விளைவாகவே அவரிடம் இருந்து தலைமைத்துவ பண்பு என்பதனை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எல்லோரோடும் இனிய கனிந்த சுபாவத்துடன் பழகும் அவரது இயல்பு எல்லோராலும் விரும்பப்படும் பணியாளராக்கியது.

அவரது இழப்பு எனக்கும், எனது நிறுவனத்திற்கும், ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரை இழந்து நிற்கும் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கின்றேன்.

ஈ. சரவணபவன்
நிர்வாக பணிப்பாளர்
லக்ஷ்மி ஒகனைசேஷன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாலை மேற்கு சிவபூதவராயர் மீது பாடிய

# திருவூஞ்சல்

### (காப்பு)

சீர் மருவு மிழவள நாட்டி னோர்பால்
சிறப்பமரும் யாழ்ப்பாணம் தேசந்தன்னில்
கார்மருவு சோலைசெறி யேழாலை மாநகரில்
கருதரிய மடவளவில் கோயில் கொண்ட
பேர்மருவு பூதகண நாதன் மீது
பெருமை மிகு திருவூஞ்ச லினிது பாட
வார்மருவு முலையுமையாள் சிவன்பால் வந்த
வேழமுகத் தைங்கரனை வாழ்த்து வோமே

நண்ணிரிய நால்வேதந் தூணாய் நாட்டி
நலங்கிளரு மக்கரங்கள் சட்டம் கூட்டி
எண்ணரிய ஆகமங்கள் விட்டம் பூட்டி
எழுதரிய விரணவமாம் பீடங் காட்டி
பண்ணரிய ஆறங்கங் கயிறு மாட்டி
பகர்வரிய ஐந்தெழுந்து விதான மோட்டி
விண்ணவரும் வணங்கரிய பீடத் தேறி
வளமைபெறு மடவளவாரே ஆடீ ரூஞ்சல்

சிவபெருமான் உமையோடு ஒருபால் மேவ
சித்திர வேலவரும் கணபதியும் இருபாற் சேர
உவமையிலா வைரவனும் வீரபத்தினும் முன்னேநிற்ப
உன்னரிய சிவகணங்கள் தோத்திரங்கள் செய்ய
பவமறுக்கும் பாங்காண மனப்பீடத் தேறி
பங்கயனுந் திருமாலும் பரவி யேத்த
கவடுவிடு மரங்கள் செறிமடவளவிற் குடியார
கணநாதப் பெருவாழ்வே ஆடீ ரூஞ்சல்

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்க
சலபதியும் வாயுவும் ஆலவட்டம் வீச
இந்திரனும் இமையவரும் ஏவல் கேட்ப
இயமனும் வந்தடிதொழுது பாங்கர் வாழ்ந்த
துந்துபியும் காளமொரு முரசு மார்ப்ப
தும்புருவும் நாரதரும் வீணைசெவியில் வாழ்ந்த
கந்தமலர்ச் சோலைசெறி மடவளவில் வாழ்வே.
கருதரிய கணநாத வடிவே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாவியொரு சுபமும் பூகமும் தெங்கும்
வானோங்கு வாகை மருதம் ஆல் அரசு
தாவிவளர் பெண்ணையும் சாலியுங் கரும்பும்
தயங்கியெழு பலமரங்கள் தாவியோங்கும்
பாவியாஞ் சலந்தரனைப் பங்கஞ் செய்த
பூதவுருக் கொண்டெழுந்த புங்கவரே
பூவினறுஞ் சோலைசெறி மடவளவிற் கோயில்
புகுந்தவனி யெல்லாம் தொழுதேத்த ஆடீ ரூஞ்சல்

சாற்றரிய கின்னார் கந்தவருவர் கீதம் பாட
சாலுமொரு மறைநான்கும் தானே யார்ப்ப
தோற்றமுறும் பலவுயிர்கள் தொழுது போற்ற
தொண்டர்களும் கைகுவித்துப் பணிந்து வேண்ட
மாற்றரிய பலமுனிவர் பரந்து கூட
மண்ணவரும் பண்ணவரும் புளகங் கூர்ப்ப
ஆற்றலொடு கணநாத ரடிபரவ மடவளவில்
அமர்ந்தருளும் அழகரே ஆடீ ரூஞ்சல்

ஆதியந்த மில்லவரே ஆடீ ரூஞ்சல்
அண்டசராசரப் பொருளே ஆடீ ரூஞ்சல்
சோதிமணி முடியாரே ஆடீ ரூஞ்சல்
தொண்டருளங் கொண்டவரே ஆடீ ரூஞ்சல்
கோதில்நவ மணியாரே ஆடீ ரூஞ்சல்
குற்றமெல்லாம் பொறுப்பவரே ஆடீ ரூஞ்சல்
மாதவர்கள் பூமாரி மடவளவிற் சொரிய
பூதவராயப் பெமானே ஆடீ ரூஞ்சல்

தெரிவரிய புராணமலை படிப்போர் வாழ்க
சிததமுறும் பத்தியுடன் கட்போர் வாழ்க
பரிவுடன் கோயில்வலம் வருவோர் வாழ்க
பரவரிய திருவிழாப் புரிவோர் வாழ்க
அரியதிருப் பணிக்குதவி செய்வோர் வாழ்க
அநுதினமும் பூசைபுரிவிப்போர் வாழ்க
திருவாரும் மடவளவில் கோயில் வாழ்க
சிறந்தவருட கணநாதப் பெருமான் வாழ்க

ஆனினங்கள் வாழி அந்தணர்கள் வாழி
அருமறைகள் வாழி ஐந்தெழுத்தும் வாழி
காணமருங் குழன்மடவார் கற்பும் வாழி
கண்டியொடு பூதிசிவ சின்னம் வாழி
மானமிகு மரசர்செங் கோலும் வாழி
மாதமுறை மும்மாரி பொழிந்து வாழி
வானமரும் முனிவர்களும் நாளும் வாழி
மடவளவிற் கோயிலொடு மடியர் வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரீக்கை

சிவனார் மகிழ் சிவ பூத ராய தேவே எச்சரீக்கை
செசு மெலாம் சிறக்க வருகணாநாதா எச்சரீக்கை
பல மறப் பணியும் அடியார்க்கரசே எச்சரீக்கை
பாவம் மறப் பதம் அருள பரமா எச்சரீக்கை

### பராக்கு

இடபத்தில் எழுந்தரு ளும்எம் தாய் பராககு
ஈரிலா ஈச னுருவா னாய் பராக்கு
கூரிய கருணை புரி குமரா பராக்கு
குலவு மலைமகள் மைந்தா பராக்கு.

### ஏலப்பாட்டு

ஏலேலோ - ஏலிலலோ - தத்தெய்யா
ஏலையேலே

(ஏலேலோ.......)

ஓராதா ருள்ளத் - தொழித் துலவுங்
கரார் திருமிடற்று - தத்தெய்யா

கணநாதன் கனதருளால்
மடவளவில் வாழ்வு செய சிவபூதவராயர்
இடர்களை யும்எந்தை இன்ப லோலன்
பத்தர் அடியார் பரமுத்தி பெற
சித்தத் தில்வைத்த திருப்பூசை புரிய
தத்து பிறவிக் கடல்நீந்தத் தெப்பமான கப்பால்
தத்தளிக்கும் அலையினூடே சிக்காமல் தப்ப
புத்தியுடன் ஓட்டும் வகை யுன்னியுன்னி
பொருளாகும் பல்வளமும் பாங்கினுடன் ஏற்றி
ஆடுவோம் பாடுவோம் தேடுவோம்
அடி கூடுவோம்.

### மங்களம்

மங்களம் மங்களம் - நித்தியசுப
மங்களம் மங்களம்

சிவ பூதவ ராயவர்க்கு
செம்மை நெறி செலுத்துபவர்க்கு
சிவபிரான் உருவானவாக்கு
மடவளவில் வாழ்பவர்க்கு

-மங்களம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி செய்வதற்கோர் உத்தமன்

வாழ்வாங்கு வாழ்ந்து பெருமையுடன் பேரன்புடன் மிளிர்ந்த பேராளன் உயர் திரு. சிவலிங்கம். வாழ்வில் உயர்ந்தவர் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்றும் பெருமையும் நியாயமும் மிளிரப் பெற்றவர். மறைந்தும் மறையாத மாணிக்கம். எவரும் செய்து கொடுப்பார் மகிழ்வார்.

அறிவில் உயர்ந்த பேராசான் சான்றோன். பண்பின் உருவம். பணிவும் மிக்க பெருந்தகை என்றும் மற்றவர் உளம் மகிழ அறிவு கொண்டவர்

உதவி உதவி என சிறந்த விளைவை கால் கோளாக்கதைகளைக் கூறும் இயல்பு கொண்டு வாழ்ந்தவர்.

ஒவ்வொருவரும் தான் வாழ்ந்தது வாழ்கின்ற இடம் எல்லாம். ஓங்கி உயர வாழ்ந்து தான் மிளிர்ந்தவர்

பண்புகளை மனித உரிமைகளை உதவும் தன்மை மிளிர வாழ்ந்தவர். கை காணாத உதவிகள் உதவ உழைத்தவர்

பிள்ளைகள் போக்கே அவர் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன

சீமெந்துத் தொழிற்சாலை உதவியாளராக, வாழ்ந்த பேராசான் கண்ணியம் கண்ணாகக் கொண்டவரை உலகே மறவாது மறக்கவும் முடியாது என்றும் வாழ்ந்தவர்.

வாழ உதவியவர்........ அவர் நாமம் வாழ்க உறுதிகொள்வோம் ஓங்குகவே உமது கனவு வாழட்டும் வளரட்டும்.

புதுமைலோவன்
இளைப்பாறிய அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரிய வாழ்வு வாழ்ந்த எமது முன்னாள் உத்தியோகத்தர்

திரு கந்தையா சிவலிங்கம் அவர்கள் எமது கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலம் பணியாற்றி 2002 இல் ஓய்வு பெற்றிருந்தார். ஓய்வு பெறும் போது அவர் கூட்டுத்தாபன யாழ் அலுவலகத்தில் உள்ளக்க கணக்காய்வு உத்தியோகத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

திரு சிவலிங்கம் அவர்கள் தமது சேவைக் காலத்தின் போது தமது கடமைகளைத் திறம்படச்செய்து மேலதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெற்றிருந்ததோடு கூட்டுத்தாபன அதிகாரிகள் ஊழியர்கள் யாவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி எல்லோர் மனத்திலும் நீங்கா இடம் பிடித்திருந்தார். அவர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னரும் கூட்டுத்தாபனத்தினைப் பற்றியும் ஊழியர்களைப்பற்றியும் அதிக அக்கறையுடன் விசாரித்துக் கொண்டியிருந்தார். அவர் காலமாவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் கூட எமது அலுவலகத்திற்கு எல்லோரிடமும் நலம் விசாரித்துக் கொண்டிருந்தமை எம்மனதில் இன்று நிழல் போல் ஆடிக்கொண்டிருக்கின்றது.

அவரிடம் இருந்த சுறுசுறுப்பினாலும் விடா முயற்சினாலும் அவர் மற்றவர்கட்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினார் கூட்டுத்தாபனச் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பும் உற்சாகம் குன்றக்கூடாது என்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார்.

அவர் பல்வேறு பொது நிறுவனங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து தனது பிறந்த ஊரான கொக்குவிலுக்கும் புகுந்த ஊரான ஏழாலைக்கும் சிறந்த முறையில் சமூக சேவை செய்துள்ளார். இதன் பலனாக அவருக்கு சமாதான நீதிவான் பதவியும் வழங்கப்பட்டது.

அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரரும் கூட அவர் யாழ் மாவட்ட கிறிக்கெட் மத்தியஸ்தராகவும் இருந்துள்ளார்.

அவர் நோய் என்று சிகிச்சை பெற்றதனை நாம் ஒரு போதும் அறிந்ததில்லை அவர் எப்போதும் உற்சாகத்துடனும் கம்பீரத்துடனும் புன்னகை பூத்த முகத்துடனுமேயே இருப்பார் அவரிடம் எல்லா வசதிகள் இருந்தும் தனது கடமைகளுக்காக யாழ் நகருக்குச் சைக்கிளிலேயே வந்து போவார். இது பற்றி நாம் கேட்கும் போது **"சைக்கிள் ஓடுவது தான் உடம்பிற்கு நல்லது"** என்று கூறுவார்.

இத்தகைய ஒருவர் திடீரென மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டதும் எம்மனம் ஒரு கணம் அதனை நம்ப மறுத்தது அவரின் மறைவு எம்மையெல்லாம் பெரும் அதிர்ச்சிக்கும் துயரத்திற்கும் உள்ளாக்கியது.

என் செய்வது, மரணம் எல்லோருக்கும் பொதுவானது. அதன் படியில் இருந்து எவரும் தவற முடியாது என்ற யதார்த்த உண்மையினை உணர்ந்து ஆறுதல் அடைவதுடன் திரு. சிவலிங்கம் அவர்களின் மனைவி, பிள்ளைகளுக்கும் எமது ஆறுதலினைக் கூறிக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி

கே.கே.எஸ் வீதி
இணுவில்



இலங்கை சீமெந்துச் கூட்டுத்தாபன
உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவலிங்கம் அவர்களின் மறைவு குறித்த இரங்கலுரை

"பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் வாழ்க்கையின் நியதி" ஆயினும் இந்த உலக வாழ்வியலானது பாசம், பற்று, அன்பு என்ற சம்சார சூழலில் வாழ்ந்த மனிதர்களின் இழப்பு சகிக்க முடியதாததே அந்த வகையில் அமரர் சிவலிங்கத்தின் இழப்பு அவர்குடும்பத்திற்கு மட்டுமல்ல அவருடன் உறவாடிய ஒவ்வொரு வருக்குமே சகித்துக் கொள்ள முடியாத பெரிய இழப்பாகும். எல்லோரும் பிறக்கின்றார்கள் வாழ்கின்றார்கள் இறக்கின்றார்கள் ஆனால் எல்லோரும் மக்கள் மனதில் நிலைத்து நிற்பதில்லை மக்கள் மனங்களில் நின்று வாழ்பவர்கள் சிலரே அந்தவரிசையிலே மக்கள் மனங்களில் நின்று வாழும் நல்ல மனித நேயமுள்ள பண்புள்ள மனிதரே இவர். தான் வாழ்ந்த காலத்தை பயனுடைய பல கங்கரியங்களுடன் இணைத்து வாழ்ந்தவர் இதனால் சமூக நல்லுறவை வளர்த்துக் கொண்டவர் எறும்பைப்போல் சுறுசுறுப்பாக எந்நேரமும் இயங்கிக் கொண்டேயிருந்தவர் நோயென்று பாயிலே படுக்காமல் இறுதிக்காலம் வரை இயங்கியவீர் இந்த உலக வாழ்க்கை நிலையில்லை என்பதனை உணர்த்துவது போல அவர் வாழ்க்கை முற்றுப்பெறாது முடிந்து விட்டது. நல்ல இல்லாளும் நன் மக்கட் பேறும், சமூக நன்மதிப்பும் பெற்று வாழ்ந்த அமரர் சிவலிங்கம் எம் உறவினர் என்பதனை விட, தம்பிள்ளையை எமது கல்லூரியிலே இணைந்த நாளிலிருந்து எம்மோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர் அறிவும் ஆற்றலும் மிக்க அவரது அறிவுரை எமக்கு பல வழிகளில் உதவியிருந்தது ஆனால் அதனை முழுமையாக பெறுவதற்கு முன்னர் அவரை அவ்வுலகம் அழைத்து விட்டது "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது போல் அவர் இவ்வுலகில் சிறப்புற்று வாழ்ந்தது போல் அவ்வுலகிலும் நேசிக்கப்படும் ஒருவராகவே வாழ்வார். உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்த அமரர் சிவலிங்கத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போம் அனைவரும்.

இயக்குனர் மா. சண்முகநாதன்
விரிவுரையாளர் ச. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மாண்பினர்

அன்பான தோழனே
பண்பான உனது குணத்தால்
எங்களுக்குத் தோள் கொடுத்து உதவிய தோழனே
எங்களை விட்டு உன்னைப் பிரித்திட
ஆண்டவன் ஏன் துணிந்தானோ
சிரித்த முகமும் செவ்விய மொழியுமாக
இனிய சொல் பேசி இதமுடன் பழகிய நண்பன் நீ
எம்மை விட்டுப் பிரிய
மனமும் தான் வந்ததோ தோழா

வேருக்கு நீர் விடும் சிரத்தையுடன்
ஊருக்கு உதவ உண்மையாய் நேசித்து
பாருக்குள் உயர்ந்து நிற்கும் பண்பாளரே
உதவிகள் பல புரிந்து வழிகாட்டினீர்கள் எங்களை
உங்கள் உயிர் பிரிந்ததால்
உங்களை சார்ந்திருந்த நாமும்
இன்று வாழச் சோர்ந்து
வழி தவறி நிற்கின்றோம் ஐயா

எமது சனசமூக நிலையங்களின் சமாசத்தின் முன்னாள்
பொருளாளரும் ஆலோசகருமாகிய
**அமரர் க. சிவலிங்கம் (J.P)**

அவர்களை நினைவு கூர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி !

பிரதேச சபை
சுன்னாகம்.

தலைவரும், நிர்வாக உறுப்பினர்களும்
வலி தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம் எனும் சீராளன்

அமரர் கந்தையா சிவலிங்கம் (J.P) அவர்களை பல வருடங்களாக நன்கு அறிவேன் கொக்குவிலை சேர்ந்த இவர் ஏழாலை சிவரத்தினம் சிவனேசமணியை மணம் முடித்து இனிது வாழ்ந்தவர். பல்வேறு சமய சமூகப் பணிகளில் ஈடுபாடு உடையவர்.

இவர் ஏழாலை சிவபூதராயர் ஆலய பரிபாலன சபை தலைவராகவும், சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உள்துறை கணக்காய்வாளராகவும், சுன்னாகம் ப.நோ.கூ.சங்க முன்னாள் இயக்குனராகவும், பிடவை நெசவாளர் சங்க தலைவராகவும் பல்வேறு பதவிகளில் அனைவருடனும் பெருமிதமின்றி இன் முகத்துடனும் புன்முறுவலுடனும் எப்போதும் பழகும் சீராளன்.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்க முன்னாள் இயக்குனராக இருந்து பல்வேறு ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் வழங்கினார்.

இவ்வாறு சமூகத்துக்கும், குடும்பத்துக்கும் ஊட்டமளிக்கும் மெழுகுதிரியாக உருக்கி வந்த அமரர் சிவலிங்கம் அவர்கள் தம் குடும்பமே தவித்துத் தடுமாறும் படியாக சடுதியாக ஏற்பட்ட நோயித் தாக்கத்தினால் கடந்த 14.12.2006 இல் இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

சி. குமரவேல்
(தலைவர்,ப,நோ,கூ,சங்கம், சுன்னாகம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொக்குவில் இந்துக்கல்லூரியின் 1962ம் ஆண்டிற்க்கான உதை பந்தாட்ட அணியின் தலைவராக க.சிவலிங்கம் அவர்கள் கல்லூரியின் அதிபர் C K கந்தசாமிக்கு வலதுபக்கமாக அமர்ந்துள்ளார்.



கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் பொழுது தனது இல்லத்திற்கு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளப்பட்ட
பின்னர் இடம் பெற்ற பாராட்டு விழாவின்
பொழுது உரை நிகழ்த்துகையில்



இலங்கை சீமெந்துக் கூட்டுத் தாபனத்திலிருந்து ஓய்வு
பெறும் பொழுது சீமெந்துக் கூட்டுத் தாபன ஊழியர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * கந்தையா + * அன்னரத்தினம்

- கமலாதேவி + சண்முகம்பிள்ளை
  - சாந்தா
  - மாலா
  - சுதா
- * சிவபாதசிங்கம் + லோகநாயகி
  - சஞ்சீவ்
- சிற்பாலன் + லில்லி
  - சுகன்யா
  - மோகன்யா
  - அகல்யா
  - அகிலன்
- சிவநேசன் + லீலாவதி
- சிவலிங்கம் (+ சிவநேசமணி)

## சிவரத்தினம் + ஜெயமணி

- சிவநேசமணி (+ சிவலிங்கம்)
- செல்வமணி + மதிபாலன்
  - செந்தூரன்
  - ராதை
  - துவாரகன்
- சாந்தினி + சோமஸ்கந்தா
  - துர்க்காயன்
  - துர்சந்
  - துர்சிகா
- சாந்தகுமார் + சுமதி
  - சஜீவன்
  - சமந்தா
- யோககுமார் + சஞ்சுதா

### சிவலிங்கம் + சிவநேசமணி

- குமுதினி + சதீஸ்கண்ணா
- தர்சன்
- டினேசன்

* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்







அமரர் கந்[illegible] யா[illegible] சி[illegible]வலிங்கம் அவர்கள் எதிர்பாராமல் திடீரென்[illegible] [illegible]வ்வுலக வாழ்வை நீத்த போது ஓடோடி வ[illegible] உதவி புரிந்தவர் களுக்கும், நேரிலும் தொலை[illegible]ரி, தந்தி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர் களுக்கும், உறவினர் களுக்கும், நண்பர்களுக்கும், பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், துண்டுப் பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டும், மதிய போசனத்தில் கலந்து கொண்டவர் களுக்கும், இம் மலரை வெளியிடுவதற்கு ஆலோசனை வழங்கியதயா மாமா அவர்கட்கும் இந்நூலை அச்சிட்டுத்தந்த சுன்னாகம் மகிந்தன் பதிப்பகத்தினருக்கும், இன்னும் நன்றி நவிலலில் தவற விடப்பட்டவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவிக்கிறோம்.




குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**மகிந்தன் பதிப்பகம் சுன்னகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org